## தலைப்பு 251 – விலை மதிப்பீட்டுத் திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக்

கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பு இலக்கம் (iii) இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் நிதிப் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது உரிய மாதிரி மற்றும் குறிப்புகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | மாதிரிப் பத்திரங்களில் தகவல்களை வழங்குவதில் குறைபாடொன்று ஏற்பட்டுள்ளதா என்பதை பரீட்சித்து பார்த்து எதிர்காலத்தில் திருத்துவதற்கு குறித்துக்கொள்கின்றேன். |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முன்னைய வருடங்களில் மற்றும் மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 406,866 கூட்டுத்தொகை இனங்காணப்பட்டு வருமானத்திற்கு உள்ளடக்கப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இனங்காணாப்படாத பெறுவனவுகள் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் விசாரணை செய்து திருத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்கின்றேன் என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | திணைக்களத்தின் வங்கிக் கணக்கிற்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 514,451 தொகையான வருமானங்கள் 90 சந்தர்ப்பங்களில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | வருமானத்தினை இனங்காணுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது என அறிவிக்கின்றேன். |

### 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | அவதானிப்புகள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **பெறுமதி** | **இணக்கமின்மை** | | |
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயம் | 136,150 | உத்தியோகத்தரொருவர் ஓய்வு பெறுவதற்கு முன்னர் ஓய்வுபெறுவதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த கடனை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக்கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதாகவும் எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாதிருக்க குறித்துக்கொண்டு வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றேன். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 231 | 503,200 | ஒவ்வொரு கொடுப்பனவு தொடர்பிலும் முழுமையான தகவல்கள் அனைத்தும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியபோதிலும், 8 சந்தர்ப்பங்களில் ரூபா 503,200 தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக் கள் தயாரிக்கப்பட வேண்டியமை | எதிர்காலத்தில் இந்த அறிவுரைக்கமைய நடவடிக்கை எடுப்பதற்கு குறித்து வைத்துக்கொள்வதாக அறிவிக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 371 மில்லியனான நிலுவை வருமானத்தில் ஆண்டினுள் ரூபா 58.7 மில்லியன் அல்லது 16 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடும் நடைமுறை மிகவும் வலுப்படுத்தப்பட வேண்டியமை. | நிலுவை வருமானத்தில் சேகரிக்கப்பட்டுள்ள அளவானது ரூபா 58,701,415 ஆக திருத்தப்பட வேண்டும் என குறிப்பிடுகின்றேன். |
| (ஆ) | மாகாண அலுவலகங்களில் சமர்ப்பித்த தகவல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 106.85 மில்லியனான நிலுவை வருமானம் அரையாண்டு நிலுவை வருமானத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வருமானத்தை அறிக்கையிடும் போது மற்றும் கணக்கு வைக்கும் நடைமுறையை சரியாக பேணுவதற்கு மற்றும் காலரீதியான இணக்கங்கள் மேற்கொள்ளப்ப | இது தொடர்பில் கணக்காய்வினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள இணக்கமின்மைகள் தொடர்பான தகவல்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு திருத்துவதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கின்றேன். |

ட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 369.52 மில்லியனான நிலுவை வருமானத்தில் 02 வருடங்களுக்கு மேற்படாத மீதி ரூபா 353.6 ஆன போதிலும், அவற்றுள் 1 சதவீதம் மாத்திரம் மீளாய்வாண்டினுள் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடும் நடைமுறை பலப்படுத்தப்பட வேண்டியமை | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன். |
| (ஈ) | 2018 யூன் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலுவை வருமானத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 21.93 மில்லியன் மாகாண அலுவலகங்களினால் முன்வைக்கப்பட்டிருந்த நிலுவை வருமானத் தகவல்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தின் நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் இணக்கம் செய்யப்பட்டு பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வு தகவல்களையும் பெற்று இந்த இணக்கமின்மை தொடர்பில் பரிசோதிததுத திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மூலதன செலவின விடயமொன்றில் முழு நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிராததுடன், அது மொத்த மூலதன நிதியேற்பாட்டில் 70 சதவீதம் ஆகும். | செலவினங்களை முடியுமான அளவில் சரியாக எதிர்வுகூறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இந்த நிதியேற்பாடுகளிலிருந்து செலுததுவதற்காக மாதாந்தம் விசேட கடிதங்கள் மூலமும் திறைசேரி கட்டுப்பணம் கோரப்பட்டுள்ள போதிலும், கட்டுநிதி கிடைக்காமையால் இந்த நிதியேற்பாடு எஞ்சிள்ளதாக அறிவிக்கின்றேன். |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 1.1.7 பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்று 03 மாதங்கள் கடந்த பின்னர் திணைக்களங்களிடையே தீர்க்கப்படடாத கடன் மீதி காணப்படாதிருக்கும் வகையில் பொறுப்புடன் செயலாற்ற வேண்டிய போதிலும், 29 முதல் 32 வருடங்கள் வரையான காலம் கடந்த ரூபா 11,916 தொகையான 03 கடன் மீதிகள் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தன. | கடன் மீதியை தீர்ப்பனவு செய்வதற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதியை பதிவழிப்பதற்கு பரிந்துரைத்து பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (ஆ) | இரு உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்றுச் சென்று மூன்று மாதங்கள் முதல் 02 வருடங்கள் வரையான கால வீச்சில் நிலவிய ரூபா 633,204 ஆன கடடன் மீதியை அறவிடத் தவறியிருந்தது. | - மேற்படி - | இந்த கடன் மீதிகள் குறித்த உத்தியோகத்தரின் ஓய்வூதிய பணிக்கொடை செலுத்தும் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |
| (இ) | பணி வறிதாக்கப்பட்ட அல்லது சேவையை கைவிட்டுச்சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 04 வருடங்கள் முதல் 27 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 436,064 | - மேற்படி - | பணி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் தொடர்பில் திணைக்களத்தின் நிறுவனப் பிரிவினால் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தொகையான கடன் மீதியில் 08 நிலவியது. | | எடுக்கப்பட்டவாறு உள்ளது எனவும் தெரிவிக்கின்றேன். |
| (ஈ) மீளாய்வாண்டின் திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி கணனி அச்சீடுகளுக்கமைவான மீதி மற்றும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தப்பட்ட பொழிப்புகளின் பிரகாரம் மீதிகளுக்கிடைய ரூபா 70,197 ஆன வேறுபாடு நிலவியது. | தனிப்பட்ட மீதி வகைப்புடுத்தலுக்கமைய மீதி மற்றும் திறைசேரி புத்தகங்களுக்கமைவான மீதி இணக்கம் செய்யப்பட வேண்டும். | அந்த வேறுபாட்டினை 2019 ஆம் ஆண்டின் போது தீர்ப்பததற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரப் பிரதேசங்களில் ஆதன மதிப்பீட்டுப் பணிகள் எதிர்பார்க்கப்பட்டவாறு உரிய காலத்தினுள் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | மதிப்பீட்டுப் பணிகளை காலரீதியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 256 பதவிகள் அல்லது 31 சதவீதம் வெற்றிடமாக காணப்பட்டதுடன், | பதவியணி வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இலங்கை மதிப்பீட்டுச் சேவையின் சேவைப்பிரமாாணம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் குறித்த வெற்றிடத்தினை நிரப்புவதற்கு மேற்படி நடவடிக்கைகளை எடுக்கப்படுமென அறிவிக்கின்றேன். |

அஅவற்றுள் 185 அல்லது 72 சதவீதம் உயர் மட்டத்திலான பதவிகளாகும். மேலும், திணைக்களத்தின் பிரதான பணியை நிறைவேற்றுவதற்கான மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் 06 வருட காலமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.